**CMP No.7667/2022** **Dated : 06.12.2022**

**ம.சா. 1 திரு. கோவிந்தராஜ் த.பெ.மாதப்பன்**

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**1.**நான் தற்போது ஒட்டப்பட்டியில் குடியிருக்கிறேன். ஆசிரியராக வேலை செய்து வருகிறேன். ராஜு என்பவர் பில்டிங் கட்டுவதற்காக என்னிடம் பணம் வாங்கினார்.அவர் கொரோனாவில் இறந்துவிட்டார். அதன்பின்னர் அவருடைய மகன் மனோகரன் என்பவர் தன் அப்பா பத்திரத்தை அடமானம் வைத்து பணம் என்னிடம் பெற்றதாகவும், அந்த பத்திரத்தை கொடுத்தால் பணத்தை அவர் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு சாட்சிகள் முன்னிலையில் பத்திரத்தை வாங்கி சென்றார். மேற்படி மனோகரன் என்பவர் மாதையன் மற்றும் செந்தில் ஆகியோரிடம் பணம் கொடுத்துவிட்டதாகவும், அவர்களிடம் வாங்கிக்கொள்ளுமாறு கூறினார். அவர்களிடம் சென்று கேட்டபோது அவர்கள் என்னை மிரட்டுகிறார்கள்.

2.பின்னர் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்தேன். அந்த புகாரை மாவட்ட குற்றபிரிவிற்கு அனுப்பப்பட்டது. குற்றபிரிவில் இருந்து இருதரப்பினரையும் அழைத்து விசாரித்தனர். மனோகரன் ஐந்து லட்சம் ரூபாய் சாட்சிகளிடம் கொடுத்ததாக கூறினார், அவர்களும் அதை ஒப்புக்கொண்டு திருப்பி கொடுத்துவிடுவதாக கூறினார்கள். குற்றபிரிவில் மேற்படி வாக்குமூலத்தை பதிவு செய்து கொண்டு அனுப்பிவிட்டனர். மேற்படி ஐந்து லட்சத்தை மனோகரன் என்பவரிடம் சாட்சிகள் கொடுத்துவிடுவதாகவும், மனோகரன் அந்த பணத்துடன் இரண்டு லட்சம் ரூபாய் சேர்த்து ஏழு லட்சம் ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்.

3. அதன்பின்னர் சாட்சிகள் மேற்படி ஐந்து லட்சம் ரூபாயை மனோகரனிடம் கொடுக்கவில்லை, நான் மனோகரனிடம் கேட்டபோது அவர்கள் கொடுக்காததால் இவர் எனக்கு கொடுக்கவில்லை என்று கூறினார். குற்றபிரிவு போலிசார் மாதையன் மற்றும் செந்தில் ஆகியோரை பலமுறை அழைத்தும் வராததால் அவர்கள் நீதிமன்றத்தில் பார்த்து கொள்ளுமாறு அறிவுரை கூறி அனுப்பிவிட்டனர்.

மேற்படி சாட்சியம் திறந்த நீதிமன்றத்தில் என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு எனது முன்னிலையில் கையொப்பம் பெறப்பட்டது.

ஒம்/– P.எழிலரசி, பி.காம், எல்.எல்.எம்.,
குற்றவியல் நடுவர், விரைவு நீதிமன்றம் (M.L),
(மு.கூ.பொ.) நீதித்துறை நடுவர் எண்.2,
தருமபுரி.